பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

பொதுசன நூலகம்
மார்தகராட்சி மன்று
25-9-1995
யாழ்ப்பாணம்

NMC

# உதயன்

விலை
ரூபா
6-00

மலர் 10 வள்ளுவர் ஆண்டு2026 புரட்டாதி 08 திங்கட்கிழமை (25-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 305

## குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் மூலம் அரசு நடத்தும்

# இனப்படுகொலைகளை கண்டித்து

# வெள்ளியன்று ஆர்ப்பாட்ட பேரணி

## மிகப் பிரமாண்டமான முறையில் வெகுஜன அமைப்புகள் நடத்தும்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 25

விமானக் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதனைக் கண்டித்து—

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29 ஆம் திகதி) மிகப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இப்பேரணியை என்றுமில்லாதவாறு பெரிய அளவில் நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களாலும் குண்டு வீச்சுக்களாலும் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## "மாஹோ" இன்று வரும்

யாழ்ப்பாணம், செப். 25

ஆறாயிரத்து 900 பரல் மண்ணெண்ணெய் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் "மாஹோ" கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் நேற்று காங்கேசன்துறை நோக்கிச் சென்றதாகத் தெரியவந்தது.

(உ-3 173)

## இன்று முதல் ரயில் சேவை வழமைக்கு!

கொழும்பு, செப். 25

கடந்த வார இறுதி வரை தென்னிலங்கையில் நீடித்த ரயில்வே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ரயில்வே திணைக்களத்தின் சகல்துறை ஊழியர்களும் இன்று முதல் வேலைக்குத் திரும்ப இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் நேற்று மாலை அறிவித்தார். (உ)

## மட்டக்களப்பு மாவட்டத்திலும் மோதல்

கொழும்பு, செப். 25

புனானை — மட்டக்களப்பு ரயில்பாதையில் 121ஆவது மைல் கல்லிற்கு அருகில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தின் போது இரு படையினரும் முஸ்லிம் பயணிகள் இருவரும் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## 140 பேருக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப். 25

கடும் பாதிப்புற்றோர் நிவாரணத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் 140 பேருக்கு நிவாரணப் பணம் இன்று காசோலையாக வழங்கப்படவிருக்கிறது.

வன்செயல்களால் மரணமானவர்களின் குடும்பத்தவர்களும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கும் இந்த நிவாரண திட்டத்தின் கீழ் வங்கிகளில் வைத்து உரிய கொடுப்பனவுகள் இன்று வழங்கப்படவிருக்கின்றன. (உ-3)

# தீர்வு திட்டத்துக்கு எதிராக பிக்குகள் நேற்றுப் பேரணி

கொழும்பு, செப். 25

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து —

பௌத்த பிக்குகள் நேற்று முற்பகல் கண்டியில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் கூட்டம் ஒன்றும் நடத்தினர்.

ஸ்ரீலங்காவில் உள்ள நான்கு மகாநாயக்கர்களினதும் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் ஐநூறுக்கும் அதிகமான பிக்குகள் கலந்து கொண்டனர்.

மல்வத்த மகா நாயக்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

### 4 நாள் தாக்குதல்களின் பின்னர்

# வடமராட்சியில் நேற்று ஓரளவு அமைதி நிலை!

வடமராட்சி, செப். 25

நான்கு நாள்களாக கடும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களுக்கு இலக்கான வடமராட்சிப் பகுதியில் நேற்று ஓரளவு அமைதி நிலவியது.

எனினும் —

நேற்றுக் காலை 8மணிக்கும் நண்பகல் 12. 30 மணிக்கும் இரு தடவைகள் வந்த புக்காரா விமானம் கரையோரப் பகுதிகளில் பல தடவை பறந்து வட்டமிட்ட போது வடமராட்சிப் பகுதியில் ஓரளவு பதற்றம் நிலவியது

வடமராட்சி நேற்றும் தொடர்ந்து வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆங்காங்கே சில கடைகள் திறந்திருந்தன.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இடம் பெயர்ந்தோருக்கு அகதி முகாம்கள் திறப்பு

வடமராட்சி, செப். 25

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியாசாலை வளவிலும், அதன் அருகில் உள்ள வீதிகளிலும், கடைகளின் விறாந்தைகளிலும் தங்கி நின்ற இடம்பெயர்ந்தோர் அனைவரும்—

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நேற்று திறக்கப்பட்ட முகாமுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாடசாலைகள், ஆலயங்களில் தங்கி இருப்போருக்கு நேற்று முதல் சமைத்த உணவு வழங்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் புலோலி வர்த்தகர் சங்கம் உட்பட தொண்டர் நிறுவனங்களும் சமைத்த உணவு வழங்கி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையிலும் சிப்பாய் ஒருவர் பலி!

கொழும்பு, செப். 25

திருகோணமலையில் இருந்து 14 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இறக்கக்கண்டிப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் இருவர் காயம் அடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## மணலாறில் தாக்குதல்

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு டிரக்டரில் சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பம் பற்றிய மேலதிக [illegible] தப்படும் வரை இ[illegible] வில்லை. (உ)

## திலீபன் நினைவு நிகழ்வில் கூடுதலான மக்கள் பங்கு

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் பத்தாம் நாளான நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதம் மற்றும் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்வோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

கோட்டைமட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான பந்தல்களில் ஏனைய நாள்களை விட கூடுதலான மக்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

ஏனைய இடங்களில் உள்ள நினைவுப் பந்தல்களில் அஞ்சலி செலுத்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்துக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு மோதலில் சிப்பாய் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், செப். 25

ஆனையிறவு முகாமின் வடக்குப்பகுதியில் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

படையினரின் முன்னணிக் காவலரண்களை புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்த முயன்றபோது இம்மோதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் 11 மணி வரை ஆனையிறவு முகாமிலிருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் நோயாளர்:
# மரணத்தை எதிர்நோக்கும் இருவர்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணத்தில் இதுவரை 7 பேர் எய்ட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 5 பேர் இறந்துவிட்டனர். மிகுதி இருவரும் இறப்பை எதிர் நோக்கி உள்ளனர், எனினும் எய்ட்ஸ் நோயுடைய அல்லது எய்ட்ஸ் நோய் வைரசான எச். ஐ.வி. தொற்றிய நிலையில் மேலும் 40 முதல் 50 பேர் வரை இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடந்த 'எய்ட்ஸ்' மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறைகளால் ஏற்படும் நோய்கள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்,

குடாநாட்டில் ''எய்ட்ஸ்'' நோய் பாரியதொரு பிரச்சினையாகத் தற்போது காணப்படாவிட்டாலும் எதிர்காலத்தில் எமது சமூகமும் இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன.

இன்று பல்வேறு காரணங்களை முன்வைத்து வெளிநாடுகளுக்குச் செல்வோர் எச். ஐ வி. வைரஸ் காவிகளாக உருவாகலாம்.

இதுவரை குடா நாட்டில் இனங்காணப்பட்ட 'எய்ட்ஸ்' நோயாளர் அனைவரும் வெளிநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பியவர்களாவர்.

இலங்கையில் 93 ஆம் ஆண்டில் 32 பேராக இனங்காணப்பட்ட 'எய்ட்ஸ்' நோயாளர் இன்று ஐந்து மடங்காக அதிகரித்து, 175 பேராகக் காணப்படுகின்றனர்.

இது தெரிய வந்த எண்ணிக்கை மட்டுமே.

எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பின்படி சுமார் ஆறாயிரம் பேராவது ''எய்ட்ஸ்'' நோய் தொற்றிய நிலையில் இலங்கையில் இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு டாக்டர் தெய்வேந்திரன் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாநகராட்சி மன்ற ''யுனிசெவ்'' நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. சு. இராஜதுரையும் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயலாளரும், முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பாளருமான திரு. த. இலங்கேஸ்வரனும் கலந்துகொண்டனர். [ஐ-எ-4]

# முக்கிய தலைவரை ஸ்ரீலங்கா விரைவில் இழக்கும்!
## சிங்கள சோதிட இதழ் ஆருடம்

கொழும்பு, செப். 25

தற்போதைய கிரகமாற்றத்தின் படி ஸ்ரீலங்காவின் மிக முக்கிய தலைவர் ஒருவர் விரைவில் மரணமடைவார்.

— இவ்வாறு கொழும்பிலிருந்து சிங்களத்தில் வாராந்தம் வெளியாகும் சோதிட இதழான ''இரஹந்த'' ஆருடம் கூறியிருக்கின்றது.

கடந்த வாரம் வெளியான இந்த இதழில் —

கிரகங்களின் தற்போதைய நிலையையும்—

நாட்டின் தலைவர்களின் ஜாதகக் குறிப்புக்களையும் பரிசீலித்தபோது இது தெரிய வந்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இவ்வருட முற்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற வேளையில், அப்பேச்சுக்கள் விரைவில் முறிவடையும் என்றும்—

பேச்சுவார்த்தை முறிவடைந்த கையோடு கடற்படைக்கு பாரிய இழப்புகள் ஏற்படும் என்றும்—

இப்பத்திரிகை முன்னரே குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகையின் ஜோதிடக் கணிப்பின்படி—

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த கையோடு திருகோணமலை துறைமுகத்தினுள் ஊடுருவி புலிகள் நடத்திய தாக்குதலில் ''ரணசுறு'', ''சூரயா'' ஆகிய கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டன என்பது தெரிந்ததே. [உ.-10]

# வடபகுதி வரும் கடிதங்கள் புதிய முறையில் சோதனை

யாழ்ப்பாணம் செப். 25

வடபகுதிக்கு வரும் தபால்கள் இப்போது புதிய முறையில் சோதனை செய்யப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் ஒவ்வொரு கடிதமும் தனித்தனியாகப் பிரித்துச் சோதனை செய்யப்பட்டன.

இப்போது—

விமான நிலையங்களில் பொருள்கள் சோதனை செய்யப்படுவது போல கணனி, இலத்திரனியல் சாதனங்கள் மூலம் கடிதங்கள் சோதனையிடப்படுகின்றன என்றும்—

சந்தேகத்துக்கு இடமான கடிதங்கள் மட்டுமே இனிமேல் கிழித்து சோதனையிடப்படும் என்று படையினர் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருப்பதாகவும் அறிய வருகிறது.

இந்தப் புதிய நடைமுறையின் படி நாளொன்றுக்கு 20 தபால் பொதிகள் சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# அரசு விதித்த செய்தித் தணிக்கை கேலிக்கூத்து என்கிறார் பி.பி.ஸி நிருபர்

கொழும்பு, செப். 25

அரசின் செய்தித் தணிக்கை கேலிக்கூத்தாக உள்ளது. ஆயினும் அது கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்று பி. பி. ஸியின் கொழும்பு நிருபர் ஜோர்ஜ் ஆனி தெரிவித்துள்ளார்.

இராணுவப் பேச்சாளர் தரும் செய்திகளையே வெளியிட முடிகிறது. அவர் வெளியிடும் செய்திகள் ஒன்றில் பொய்யாக உள்ளன அல்லது அவருக்கு எதுவுமே தெரியாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

செய்தித் தணிக்கை தொடர்பாக பி.பி.ஸி செய்தி நிறுவனம் ஜோர்ஜ் ஆனியை பேட்டி கண்டது.

அப்போது அவர் தெரிவித்ததாவது!

★ கேள்வி: பாடசாலைப் பிள்ளைகள் உட்பட 50க்கு மேற்பட்டோர் வடக்கில் பலியானது குறித்து தகவல் அறியப்பட்டுள்ளதா?

★ ஜோர்ஜ் ஆனி: இன்று (நேற்று) காலை இது பற்றி கொழும்பில் தகவல் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற குண்டு வீச்சு பற்றிய எனது செய்தி சனிக்கிழமை இரவு பூரணமாகத் தணிக்கை செய்யப்பட்டது.

ஆனால் வேறு ஒரு சர்வதேச செய்தி நிறுவனத்தின் செய்தி தணிக்கைகளுக்குத் தப்பியுள்ளது.

கொழும்பு ஞாயிறு பத்திரிகைகள் அச்செய்தியை வெளியிட்டுள்ளன.

இனவாதத்தை பத்திரிகைகள் தூண்டி விடுவதைத் தடுப்பதும் செய்தித் தணிக்கையின் ஒரு நோக்கம் என்று கூறப்பட்டாலும் பௌத்த பிக்கு ஒருவர் அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்ட நகலை எரிக்கும் புகைப்படம் ஞாயிறு பத்திரிகையில் வெளியாகி உள்ளது.

செய்திகளை விடவும் இத்தகைய படங்கள் இனப்பூசலைத் தூண்டிவிடக் கூடியவை என்றே நான் கருதுகிறேன்.

★ கேள்வி:- நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட இராணுவ நடவடிக்கை தற்போது வடக்கில் நடைபெறுகிறதா?

★ ஜோர்ஜ் ஆனி:- தணிக்கை அதிகாரியின் அனுமதி இன்றி அதுபற்றி நான் கூறமுடியாது. எனினும் தற்போது நடக்கும் குண்டுவீச்சுக்கள் அதற்கான பீடிகையாக அமையலாம். (ஐ-க)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் கல்விக் கோட்டங்களின் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

யாழ். பல்கலை மைதானத்தில்

★ 3-00 மணி:— [17 வயதுப் பிரிவு] யாழ். இந்து எதிர் கொக்குவில் இந்து

★ 4-00 மணி:— (19 வயதுப் பிரிவு] யாழ். இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

கோப்பாய் பொது மைதானத்தில்

★ 2-30 மணி:— [15 வயதுப் பிரிவு, அத்தியார் இந்து எதிர் சோமஸ்கந்தா

★ 3-30 மணி—: (15 வயதுப் பிரிவு) உரும்பராய் சைவத்தமிழ் வித்தி. எதிர் சிறுப்பிட்டி அ. த. க. வித்தி.

★ 4-30 மணி:— (17 வயதுப் பிரிவு) கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் அத்தியார் இந்துக்கல்லூரி (உ]

# அடுத்த மாதம் 'ஹபரண' 2 தடவைகள் வரும்

யாழ்ப்பாணம், செப். 25

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் ''ஹபரண'' கப்பல் அடுத்த மாதம் இரு தடவைகள் பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் கப்பல் 5 ஆம் திகதி திருகோணமலைக்குத் திரும்பும் என்றும் —

மீண்டும் 18 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் கப்பல் மறுநாள் திருகோணமலைக்கு திரும்பும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கப்பலில் யாழ். வரவிருக்கின்றனர்.

நோயாளருக்கு கப்பல் சேவையை நடத்தும் நோக்குடன் இக்கப்பலை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு பெற்றிருந்தபோதும், தற்போதைய சூழ்நிலை காரணமாக அந்தச் சேவை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# கிட்டு பூங்கா நாளை இயங்காது

தியாகி திலீபனின் நினைவு தினமான நாளை கேணல் கிட்டு சிறுவர் பூங்கா மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

# கலந்துரையாடல்

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் தேசிய பயிலுநர் சபையின் கீழ் உதவித் தாதிகள் பயிற்சியைப் பெற்ற பயிலுநர்களுக்கான முதலுதவிப் பயிற்சியும், கலந்துரையாடலும் நாளை பிற்பகல் 3. 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

# திருநகரில் திறப்புவிழா

யாழ்ப்பாணம், செப். 25

வன்னி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட நோயாளர்களின் நலன்கருதி கிளிநொச்சி திருநகரில் யாழ். நோயாளர் நலன் புரிசங்கத்தின் கிளை ஒன்று இன்று காலை 9. 30 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது. [உ-3]

# மேம்பாட்டு பேரவையில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 25

பாடசாலைகள் மீது விமான, ஷெல் தாக்குதல் நடைபெறுவது குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு தமிழீழக்கல்வி மேம்பாட்டு பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [உ-3]

# ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 3ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

றெக்கிளமேசன் அருள் மாதா ஆலய ஏழாம் ஆண்டு திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5-30மணிக்கு செப மாலை வழிபாடுகளைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசீருடன் திருநாள் வைபவங்கள் நிறைவடையும். (ஐ-51)


# அடியார்களின் கவனத்திற்கு

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்

மேற்படி ஆலயம் 1986 ஆம் ஆண்டு முதல் பரிபாலன சபையாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இருந்தும் ஆலயம் பொது மக்களுடையது என்றும், எக்காலத்திலும் பரிபாலன சபையே நிர்வகிக்கும் என்றும் உறுதியாக தெரிவிப்பதோடு பொய்ப் பிரசாரங்களை நம்பாது அடியார்கள் கடந்த காலங்களைப் போன்று தொடர்ந்தும் ஆலய வளர்ச்சிக்கு தங்களாலான ஒத்துழைப்பை வழங்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறோம் அடியார்கள் தாங்கள் வழங்கும் காணிக்கைகளை ஆலயக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும். பற்றுச் சீட்டு பெறாமல் யாரிடமும் வழங்கப்படும் காணிக்கைகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர், அத்தோடு எவருக்கும் மேற்படி ஆலயம் சம்பந்தமாக நிதியோ, பொருளோ சேகரிக்க அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதையும் தெரிவித்து கொள்கிறோம்.

என். இராஜதேவன்
தலைவர்
பரிபாலனசபை

வீ. எஸ். இரத்தினசபாபதி — செயலாளர்.
செ. வைரமுத்து — பொருளாளர்.

[38675]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் எட்டவில்லை

## செயலக புனர்வாழ்வுப் பகுதி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்தில் நேரடியாக தலையிட்டு பின்பற்றிய புதிய நடைமுறையின் போது ஆயிரத்து 856 இடம்பெயர்ந்த குடும்பங்கள் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்த ஒரு தொகுதி இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர்உணவு அட்டைகள் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது காணாமற் போயிருந்தன.

இதனையடுத்து மோசடிகளைத் தவிர்ப்பதற்காக 28 'பி' உணவு முத்திரைக்கான உலர்உணவு விநியோகத்தை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ். மேற்கொண்டது.

இந்த உலர்உணவு முத்திரைக்கான உணவு விநியோகம் பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை, மானிப்பாய், வேலணை, காரைநகர், சங்கானை புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

தேசிய அடையாள அட்டை குடும்பப்பதிவு அட்டை என்பனவற்றுடன் குடும்ப அங்கத்தவரே நேரில் வந்து நிவாரணப் பொருள்களைப்பெறும் புதிய நடைமுறை இதில் பின்பற்றப்பட்டது.

இந் நடவடிக்கையின் போதே பெரும் எண்ணிக்கையான இடம் பெயர்ந்தகுடும்பங்கள் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்தது தெரியவந்தது.

புனர்வாழ்வுப் பகுதியினரால் 18 ஆயிரத்து 274 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அவர்களில் 16 ஆயிரத்து 418 பேரே கடந்த வாரம் நிவாரணப் பொருள்களைப் பெற்றுள்ளனர்.

நிவாரணப் பொருள் விநியோகத்தில் இந்த புதிய நடைமுறை ஏனைய ப. நோ. கூ. சங்கங்களிலும் விரைவில் மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

[ஐ-4]

## உண்ணாவிரத நிகழ்வுகளில் இன்று பங்குபற்றுவோர்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நாள்களை ஒட்டி நடைபெற்றுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் இன்று பங்குபற்றுவோரின் விவரம் வருமாறு:

*வலிகாமம்*

★ நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில்— ப. நோ. கூ. சங்கம், மடம் வீதி மக்கள். சண்டிலிப்பாய் ஊர்காப்புக் கழகம் இடம்பெயர்ந்தோர் முகாம், நவாலி மக்கள்.

*தீவகம்*

★ நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில்— மண்டைதீவு மகாவித்தியாலயம்.

*தென்மராட்சி*

★ நுணாவில் மேற்கு மணங்குணாய்ப் பிள்ளையார் கோயில் முன்றில்— கைதடி வர்த்தகர் சங்கம், வர்த்தக ஊழியர்கள், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க ஊழியர்கள், சாவகச்சேரி பொன்னம்மான் குடியிருப்பு, கேடில்ஸ் புரம், இராசஸ்ரீ மக்கள். கொடிகாமம் உழவு இயந்திர உரிமையாளர்சங்கம், கார் உரிமையாளர் சங்கம், கிளாலி பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கம், கடல் தொழிலாளர் சங்கம், பளை இத்தாவில் சிற்றூர் மக்கள்.

*வடமராட்சி*

★ கரணவாய் மூத்த விநாயகர் கோயில் மைதானம்— உடுப்பிட்டி கலைநேசன், கலைமகள், திருமகள் சந்திரோதயம் ச.ச நிலையங்களின் உறுப்பினர்கள், அப்பிரதேச மக்கள், கரணவாய் மகாவித்தியாலயம் கரவெட்டி மத்தொனி சிற்றூர் மக்கள்

*மாணவர் அமைப்பு*

★ பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச மகாவித்தியாலயம், சென். தோமஸ் கல்லூரி— காலை 8-30 மணி.

*கடற்புலிகள்*

★ நாகர்கோவிலில் மருதங்கேணி மக்கள் — காலை 7 மணி [ஐ]

### மந்திகை ஆஸ்பத்திரியில்

## இரவு பகலாக ஓய்வின்றி பிரெஞ்சு டாக்டர்கள் சேவை

வடமராட்சி, செப். 25

படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுவரும் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் அங்குள்ள பிரெஞ்சு மருத்துவக் குழு [எம். எஸ். எவ்] டாக்டர்கள் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர்.

நாகர்கோவில் உட்பட வடமராட்சியின் பல பகுதிகளிலும் படையினர் நடத்திய விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் சிக்கிப் படுகாயமடைந்த பொது மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பராமரித்து சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதில் பிரெஞ்சு டாக்டர்கள் ஒய்வு இன்றி சுறுசுறுப்புடன் இரவு பகலாகத் தொடர்ந்து சேவையாற்றி வருவதைக் காணமுடிகிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லாமல் அங்கு வைத்தே அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் பல உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

படுகாயமடைந்தவர்களைக் கண்டு கதறியழும் உறவினர்களுக்கு பிரான்ஸ் மருத்துவக் குழு டாக்டர்கள் மிகவும் பவ்வியமாக ஆறுதல் கூறியதையும் காணமுடிந்தது.

(ஐ-173)

## வடமராட்சி பகுதிகளுக்கு செஞ். அதிகாரிகள் விஜயம்

வடமராட்சி, செப். 25

வடமராட்சியில் படையினரின் விமானக்குண்டு வீச்சு மற்றும் அகோர ஷெல் வீச்சுக்களினால் அனர்த்தங்கள் நிகழ்ந்த பகுதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நேரில் விஜயம் செய்தனர்.

நாகர்கோவில் மகாவித்தியாலயம் பகுதியிலும் ஏனைய இடங்களிலும் படையினரின் தாக்குதல்களால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரங்களை அவர்கள் சேகரித்தனர்.

மந்திகை ஆஸ்பத்திரிக்கும் செஞ்சிலுவை அதிகாரிகள் விஜயம் செய்து காயமடைந்தவர்களைப் பார்வையிட்டனர். அவர்களது விவரங்களையும் திரட்டினர்.

இதேவேளை—

யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம், திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் ஆகியோரும் நேற்று வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

புக்காரா குண்டுவீச்சுக்கு இலக்கான நாகர்கோவில் பகுதிக்கும் அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகத்தில் அவர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். [ஐ-15-173]

## பெற்றோர் மாணவர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம் செப். 25

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, இன்று திங்கட்கிழமை முதல் உடுவில் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 1 மணி முதல் மாலை நேரப் பாடசாலையாக இயங்கவுள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரை பிற்பகல் 1 மணிக்கு சமூகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## நவராத்திரி இன்று ஆரம்பம்

கொழும்புத்துறை, செப். 25

நவராத்திரி விரதம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

பெரும்பாலான இந்து ஆலயங்களில் விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நவராத்திரி விழா நடைபெறும்.

இவ்வருடம் முதல் இரு தினங்களும் துர்க்கை அம்மனுக்கும், அடுத்த மூன்று தினங்களும் இலக்குமிக்கும், கடைசி மூன்று தினங்கள் கலைமகளுக்கும் பூசை நடைபெறும்.

விஜயதசமி எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையாகும். அன்று கேதாரகௌரி விரதமும் ஆரம்பமாகும்.

[அ-30]

## பெருமாள் கோவில் உற்சவம்

கொழும்புத்துறை, செப். 25

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர் வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.15 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 10.15 மணிக்கும் நடைபெறும்.

உற்சவ நாள்களில் தினமும் இரவு 7-30 மணி தொடக்கம் 8-30 மணிவரை அருளுரைகள் நடைபெறும்.

(அ-30)

## புலிகளின் குரல் வானொலியில்

**25 – 09 – 1995**

**திங்கள் இரவு**

★ 8-02 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி தமிழீழன் எழுதிய — ''திலீபம்''
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — வன்னேரிக்குளம் எழுத்தாளர் திரு. ச. முருகானந்தனுடனான செவ்வி

**26 – 09 – 1995**

**செவ்வாய் காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டுநினைவாக சிறப்பு நிகழ்ச்சி தமிழ்க்கவி எழுதிய ''துரோகத்தின் முகத்திரை''
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

**திங்கள் மாலை**

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தியாக தீபம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — நேயர்நெஞ்சம்

## றோட்டறியின் போலியோ ஒழிப்பு ஏற்பாடுகள் குடாநாட்டில் தீவிரம்

சர்வதேச றோட்டறிக் கழகத்தின் போலியோவை 2000 ஆவது ஆண்டில் முற்றாக ஒழிக்கும் வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் யாழ். குடாநாட்டிலும் தீவிரமாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

யூனிசெவ், உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஸ்ரீலங்கா சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் அனைவருக்கும் போலியோத்தடுப்பு [illegible] இந்த ஒழிப்பு, [illegible] திய சுகாதாரத் திணைக்களங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கலந்துரையாடல்களையும் பயிற்சி வகுப்புகளையும் ஒழுங்கு செய்துள்ளது.

கடந்த சனிக்கிழமை போரூட் நிறுவனத்தின் ஆதரவுடன் அதன் சித்தன்கேணி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடல் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையிலும்—

28 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்புத்துறை வசந்தபுரம் சனசமூக நிலையத் தொண்டர்களுக்கான மீளாய்வுக் கலந்துரையாடல் வசந்தபுரம் சனசமூக நிலையத்திலும்—

29 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதியைச்சேர்ந்த வெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கான கலந்துரையாடல் மானிப்பாய் மெமோறியல் ஆஸ்பத்திரியில் இயங்கும் மானிப்பாய் சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையிலும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

(அ-4)

## கடிதினில் கைகூடி வருமே!

விண்மீ தொளிர்ந்திடும் விண்மீன் போலவே
விளங்கும் தியாக தீபம்
விண்ணவர் வியக்கவும் மண்ணவர் மதிக்கவும்
வியனுல கடைந்த வீரன்
மண்மீ தினில் மாந்தர் மலர்தூவி ஏத்திடும்
மகிமைப் பிரதாப தீரன்
மாநிலந் தனில்ஈழ மண்ணில்வாழ் மக்கள்தம்
மானம் காத்திட்ட சீலன்
உண்ணீரு மின்றியே உடல்நீத்த உத்தமா!
உள்ளநெக் குருக வைத்தாய்
உலகினில் அகிம்சா தியாகமும் ஒங்கவே
உயிரினைக் கொடுத்து நின்றாய்
கண்ணீ ரோடவுன் தியாகரு பங்கண்டு
கடிகிற்[று] எட்டாண்டு காலம்
காலத்தின் பெருமகளே! திலீபா!! உன்லட்சியம்
கடிதினில் கைகூடி வருமே!

திருமதி க. குமாரசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், சிங்கர் நிக்சி தையல் இயந்திரம் மோட்டாருடன், மோட்டர் பம், உருக்கு அலுமாரி, படிப்பக வாங்கு மேசைகள், ஆட்டுக்கல்லு, கல்லு உரல் உட்பட பலபொருள்கள் விற்பனைக்குண்டு. ம ராஜன், 111, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (38658)

### காணி விற்பனைக்கு

செம்மணி வீதி, கடுக்காயடி ஒழுங்கையில் 72/7 இலக்க காணி, வான்பயிர், செய்பயிர் உட்பட 4½, பரப்பு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீ. பழனித்துரை, 24, குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [தினம் மாலை 5-00 மணிக்குப் பின் சந்திக்கலாம்] [38656]

### தவறிவிட்டது

22-9-95 வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணியளவில் ஆலங்கேணியிலிருந்து கிளாலிக்கு வந்த 596ஆம் இலக்க வள்ளத்தில் வெள்ளை உறையுள் இடப்பட்ட புதிய பெண்கள் பணிக்கூடு மற்றும் பிரதான ஆவணங்கள் அடங்கிய றோஸ் நிற "பேர்ஸ்" தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறியத்தரவும். திருமதி ச. யோகலிங்கம், 65/2, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (38668)

### காணவில்லை

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த குட்டித்தம்பி (வல்லிபுரம்) தர்மகம் என்பவரை 12-9-95 முதல் காணவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கைதடி தெற்கில் வசிக்கும் அன்னாரது மகள் பகவதியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (38670)

## மந்திகைக்கு மேலதிக அம்புலன்ஸ்

வடமராட்சி, செப். 25

அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வதற்காக மருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் சங்கானை அரசினர் வைத்திய சாலை அம்புலன்ஸ் வண்டியை மேலதிகமாக அனுப்பி வைத்துள்ளது. (ஐ-173)

## நவிண்டிலில் ப.நோ.கூ. சங்க வெதுப்பகம்

வடமராட்சி, செப். 25

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவு அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து பாண் பணிஸ் வகைகளைத் தயாரிக்கவுள்ளது.

இதற்கென புதிய வெதுப்பகம் ஒன்றை நவிண்டிலில் இச்சங்கம் அமைத்துள்ளது. [ஐ-173]

## மற்றொரு சிறுமி மரணம்

நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது வெள்ளிக்கிழமை "புக்காரா" நடத்திய குண்டு வீச்சில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மற்றும் ஒரு சிறுமி நேற்று உயிரிழந்தார்.

நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சசிரூபி [வயது 13] என்ற மாணவியே உயிரிழந்தவராவார். [ஐ-13-15]

---

## பிறந்த நாள் நினைவலைகள்

(25 – 09 – 1995)

### செல்வி விமலா தம்பிநாயகம்

(Accounts Clerk Mc Leod Hospital Inuvil)

புவல நெஞ்சினள் அனுப்பினாள்
இறை நெஞ்சினள் உதிர்ந்தனள்
வழி வழி யறமே தாங்கி – தன்
வாழ்வினை யதற்கே தந்த
பழியறியாத பாவையும்
எண்ணரிய வாழ்வை மறந்தாள்
எட்டாத தூரம் சென்றாள்
விழி வழி பொழுக நீரை – எமக்கு
விட்டுமே நாளும் சென்றாள்

பிறந்தநாளில் உனை நினைந்துருகும்;
சகோதரிகள்.

[38669]

---

யாழ். மாவட்ட

## வெதுப்பக உரிமையாளர் சங்கம்

உடுவில் / தெல்லிப்பழை கிளை

## அங்கத்தவர்களுக்கு

மேற்குறிக்கப்பட்ட கிளையினது சகல அங்கத்தவர்களையும்
27 – 09 – 1995 புதன்கிழமை
மதியம் 12-00 மணிக்கு
மாவட்டத் தலைவரின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

– மாவட்ட செயலாளர்.

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[சி-2342]

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தசாமி சோமசேகரம்

[இளைப்பாறிய தபால் அதிபர், வல்வெட்டித்துறை)

பிறப்பு: 10 - 02 - 1934
இறப்பு: 27 - 08 - 1995

எல்லோரிடமும் இன்புற்றிருக்க
கடமைகள் சில காத்திருக்க
விதியின் செயலால் கொடுநோய் வந்தாலும்
வேதனை ஏதும் அறியாமல் – கைகூப்பிய
கணபதி தன் கழலடி சேர்ந்தானோ
நம்பமுடியாத நிலையில் நாமும் வேண்டுகிறோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவன் அடியில் அனைத்தும் பெற்றே
ஆறுதல் எமக்கு அளித்திடுவீர்கள்!

எங்கள் தெய்வம் திடீரென எம்மை விட்டுப் பிரிந்து செய்வதறியாது நின்றபோது எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோர்க்கும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை [1995-09-26] நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரில் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

அ. மி. பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை, (38589)

---

## மாணவர் அறிவியல் கழக அறிவியல் வகுப்புக்கள்

மாணவர் அறிவியல் கழகத்தினர் வாராந்தம் நடத்தும் அறிவியல் வகுப்புக்களின் தொடரில் இந்த வாரம் நடைபெறவுள்ள வகுப்புகள் வருமாறு;-

**திங்கள்**

★ மு. ப 9-30 — 2-00மணி வரை — சோ. வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வி விஞ்ஞான செயன்முறை வகுப்பு மெழுகின் உருகலின் தன் மறைவெப்பம் காணல், செம்பு, நீர், அலுமினியம் ஆகியவற்றின் தன்வெப்பக் கொள்ளளவை காணல், நீரின் ஆவியாதல் மறைவெப்பத்தைத் துணிதல், தீபனை கருவிகள் சிலவற்றைச் செய்து பார்த்தல், காபனீரொட்சைட்டு, குளோரின், ஒட்சிசன் தயாரிப்பு.

**புதன்**

★ பி. ப 4-00மணி — 5-00 மணிவரை உறுப்பினர்களோடு கலந்துரையாடல்.

★ பி.ப 5-00மணி — 6-00 மணிவரை "அறிவியல் ஒளிப் படக்காட்சி"

**வியாழன்**

★ மு. ப 9-30 மணி — 2-00 மணிவரை இளவாலை கென்றி யரசர் கல்லூரி விஞ்ஞான செயன்முறை வகுப்பு; விலங்குக்கலம், நியுரோன் அமைப்புகளை அவதானித்தல், இதயம் கண், மூளை, ஈரல் அவதானிப்பு அறிவியல் ஒளிப்படக்காட்சி குருதித்தொகுதி, சுவாசத்தொகுதி.

★ பி. ப 3-00மணி — 4-30 மணிவரை ஆண்டு 10 — கணித செயன்முறை வகுப்பு.

★ பி. ப 3-30 — மணி4-30 மணிவரை ஆண்டு8, விஞ்ஞான செயன்முறை வகுப்பு.

★ பி. ப 4-30மணி — 5-30 மணிவரை ஆண்டு 8, கணித செயன்முறை வகுப்பு.

**வெள்ளி**

★ பி. ப 3-00மணி — 4-00 மணிவரை ஆண்டு 11, கணித செயன்முறை வகுப்பு.

★ பி. ப. 4-00மணி — 5-30 மணிவரை ஆண்டு 11, விஞ்ஞான செயன்முறை வகுப்பு.

**சனி**

★ மு. ப. 9-30 மணி — 1-00 மணிவரை ஆண்டு 9, கணித செயன்முறை வகுப்பு

★ மு. ப. 11மணி 12-00 மணிவரை ஆண்டு 7 கணித செயன்முறை வகுப்பு

பி. ப. 4-00 மணி — 5-30 மணிவரை ஆண்டு9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு.

---


## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்:-

**30 - 09 - 1995**

10-30 மணி

Lectures By:

**S. P. Sivapathasundaram**

M. I. D. P. M. (London)

★ கட்டணம் தவணை முறையில் மாதம் 400/-
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Short - Hand & Typing புதிய பிரிவுகள் 02 - 10 - 1995 ஆரம்பமாகின்றன.

உறுதியான கல்வியைப் பெற:

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA

(சி-2344)


---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 09 — 1962



மறைவு: 05 — 10 — 1994

### அ. சபேசன் B. Com

(யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)

திதி: 25 – 09 – 95

கொடிய நோய்வந்து எம்மைவிட்டு
பிரிந்து ஆண்டு ஒன்று சென்றதே
ஆண்டு ஒன்று சென்றாலும் உமது
நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது;
உங்கள் ஆத்மா சாந்தியடைந்து நன்னிலை பெற
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்.

அரியாலை. (38624)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மயக்கம் தெளியுமா?

இலங்கை அரசியலில் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே இராணுவ ரீதியாக ஆதிக்கம் செலுத்துவர். எனவே அரசாங்கம் அவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் கருணசேன கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அரசியல் யதார்த்தத்தை— உண்மை நிலையை— உணர்ந்து பேசியிருக்கிறார் அவர்.

வேண்டுமானால், போரின் மூலம் விடுதலைப் புலிகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம் அல்லது பலவீனம் அடையச் செய்யலாம். ஆனால் கடைசிச் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் பேசித்தான் தீர்வு ஒன்றைக் கொண்டு வர முடியும். கொழும்பில் உள்ள தமிழ்த் தலைவர்களுடன் பேசுவதன் மூலம் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது — என்றும் அவர் சொல்லியுள்ளார்.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சிங்கள அரசியல் தலைவர்கள் எதிரணியில் இருக்கும் போது மட்டுமே உண்மை நிலையை உணர்வதுண்டு; அரசியல் ஞானமும் அப்போது தான் வருவதுண்டு.

ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும், உண்மை அவர்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. அது தென்பட்டாலும் தெரியாதது போலப் பிதற்றுவார்கள். அல்லது உண்மைக்குப் புறம்பாக வேண்டுமென்றே கருமமாற்றுவார்கள். உண்மையை மறைக்க முயல்வார்கள்; அல்லது அதனை வசதியாக மறந்து விடுவார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவும் அந்த வகையினரில் சேர்ந்து கொண்டு விட்டார். எதிரணியில் இருந்த போது அவர் பார்த்த பார்வைக்கு முற்றிலும் முரண்பட்டதாகவே இப்போதைய அவரது நோக்கு உண்டு.

இராணுவ ரீதியாக மேலோங்கி நின்றும் விடுதலைப் புலிகளை கீழே தள்ளி விடலாம் என்று எண்ணுகிறார். அமைச்சர் அனுருத்த போன்ற போர் வெறியர்களின் தப்புக் கணக்குகளையும், புளுகுகளையும் நம்பித் தாமும் ஓர் போர்ப் பிரியராகி விட்டார்.

தமிழர்களின் அரசியல், பொருண்மிய, சமூக விடுதலை என்ற உயரிய இலட்சியத்துக்காக, அர்ப்பணிப்புடன் உழைக்கும் புலிகள் எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் பலமடைவார்கள் என்பதனை அவரால் கிரகித்துக் கொள்ள முடியவில்லையே!

விடுதலைப் புலிகளை ஓரங் கட்டிவிட்டு, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற கற்பனை வாதத்தில் திளைத்ததாலும் அவருக்கு மதிமயக்கம் வந்து விட்டது!

இந்த நிலையிலிருந்து திருந்தி, உண்மையைக் காண்பதற்கு சந்திரிகா மனங் கொள்ளாவிடில், பாதிப்புறப் போவது சிங்களவர் தேசமே! பேராசிரியர் கருணசேன போன்றவர்களால் சந்திரிகாவை மயக்கம் தெளியவைத்தால் அது, சிங்களவர்களுக்கு நன்மையே!

---

படை முகாம்கள் மூடப்பட்டதை அடுத்து

# கிழக்கில் இருந்து சிங்களவர்கள் அதிக எண்ணிக்கையில் வெளியேற்றம்

கொழும்பு, செப். 25

பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுவிட்டதை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் வெளியேறி வருவதாக ''ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, ஆயித்தியமலை பகுதிகளில் இருந்த இரு பிரதான படைமுகாம்கள் உட்பட 25க்கு மேற்பட்ட இராணுவ முகாம்கள் மூடப்பட்டதை அடுத்து இந் நிலைமை தோன்றியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் இருந்து வாபஸ் பெறப்பட்ட படை அணிகள் யாழ். குடாநாட்டு இராணுவ நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

படைமுகாம்கள் மூடப்பட்ட பகுதிகளில் பல கிராமங்கள் விடுதலைப் புலிகள் வசம் உள்ளன.

இவ்வாறு ''ஐலண்ட்'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விறகுகாலை, அரிவுகாலை உரிமையாளருக்கு சங்கம்

யாழ்ப்பாணம், செப். 25

விறகுகாலை அரிவுகாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது சூழலியல் அனர்த்தங்கள் தொடர்பாகவும், அரசியல் ரீதியாக ஏற்படும் அபாயகரமான அழிவுகள் மற்றும் அவற்றை தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலின் முடிவில் விறகுகாலை, அரிவுகாலை உரிமையாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சங்கம் ஒன்றை அமைப்பது என முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

வட்ட ரீதியாக ஒவ்வொரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட செயலகங்களில் இதற்கான ஆரம்பப்பதிவுகள் நடைபெற்று வருவதாக சூழல் பாதுகாப்பு பகுதியினர் அறிவித்துள்ளனர். [ஐ]

## சைக்கிளில் விறகு விற்போர் பதிவு செய்ய வேண்டும்

சைக்கிள்கள் மூலம் விறகு வியாபாரம் செய்பவர்கள் தங்களை இனங்காணும் முகமாக வட்டச் செயலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் அறிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் பெருகிவரும் விறகுத் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக அண்மைக்காலங்களில் பெருமளவு பற்றைக் காடுகளும், பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டு துவிச்சக்கர வண்டிகளிலும் ஏனைய வாகனங்களிலும் அதிகளவில் எடுத்துச் செல்லப்படுவது அதிகரித்துள்ளது.

எமது பிரதேசத்தின் சூழலியல் சீர்கேடுகளுக்கும் மாறிவரும் மண்வளத்திற்கு பெரியளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்த வழிவகுப்பதுமான இந்நடவடிக்கைகளை தீர்வுக்கு கொண்டுவரும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய மரங்கள் வெட்டப்படுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## சுவாமி பிரேமானந்தாவின் சீடர் மாத்தளையில் கைது

கொழும்பு, செப். 25

தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டுள்ள பிரேமானந்த சுவாமியின் வெளிநாட்டுச் சீடர்கள் இருவர் மாத்தளையில் வைத்து கடந்த புதன்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் ஒருவர் ஜேர்மனியையும், மற்றையவர் பிரான்ஸையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இருவரும் தமிழ்நாட்டில் சுவாமி பிரேமானந்தாவின் ஆசிரமத்திலேயே தங்கி இருந்தனர்.

இவர்கள் மாத்தளையில் வசிக்கும் சுவாமி பிரேமானந்தாவின் உறவினர் ஒருவரைச் சந்திக்க தமிழ்நாட்டிலிருந்து வந்ததாகக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அந்த வீட்டைச் சுற்றி வளைத்து இவர்கள் இருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுவாமி பிரேமானந்தா இலங்கையில் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ- எ)

## தொலைபேசி வழங்குவதில் படையினருக்கு சலுகை

கொழும்பு, செப், 25

தனிப்பட்ட தொலைபேசிகளை வழங்கும்போது வடக்கு மற்றும் கிழக்கில் கடமையாற்றும் படையினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் தொலைத்தொடர்பு அமைச்சு எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து இதனை நடைமுறைப்படுத்தும்.

இப்பகுதிகளில் கடமையாற்றும் இராணுவ உத்தியோகத்தர் உடனடியாகத் தமது குடும்பங்களுடன் தொடர்பு கொள்வதற்காக இந்த வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## மாதகல் பகுதி படையினர் நீண்ட வேலி அமைப்பு!

சண்டிலிப்பாய், செப். 25

மாதகல், இளவாலைப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் பண்டத்தரிப்புக்கும், மாதகலுக்கும் இடைப்பட்ட நீண்ட வயல் பகுதியில் வேலி ஒன்றை அமைத்துள்ளனர்.

தகரங்கள், அஸ்பெஸ்ரர் கூரைத் தகடுகள் என்பனவற்றைப் பயன்படுத்தியே இராணுவத்தினர் வேலியை அமைத்துள்ளனர் — என வீடுகளைப் பார்க்கச் சென்று திரும்பிய சிலர் தெரிவித்தனர். (ஐ-15)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 25

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால், இன்று 25 ஆம் திகதி நடத்தப்படவிருந்த, யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபை, சமநல சேவைத் திணைக்களங்கள், மற்றும் நகரசபை ஆகியவற்றுடனான கலந்துரையாடல், மறு அறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## பழ டின்களில் தங்க கட்டிகள்!

கொழும்பு, செப் 25

துபாயில் இருந்து பழங்கள் அடங்கிய மூன்று தகர டின்களில் தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த முஸ்லிம் பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

தங்கக் கட்டிகளின் பெறுமதி பத்தரை லட்சம் ரூபாவாகும். [ஒ]

மண்முனை உதவி அரச அதிபரின்

## 'டபிள்கப்' வாகனம் கடத்தப்பட்டது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொட்டியாமுலை என்ற இடத்தில் மண்முனை உதவி அரச அதிபரின் டபிள்கப்' வாகனம் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டது.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதே சமயம், கடந்த புதன்கிழமை காலை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களையும், அவர்களது 5மீன்பிடி வள்ளங்களையும் இனம் தெரியாதோர் கடத்திச் சென்றதாகவும் —

பின்னர் மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## சம்பள காசோலை மாற்ற அலையும் அரச ஊழியர்கள்

தென்மராட்சி, செப். 25

வங்கிகளில் பணக் கொடுப்பனவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பல அரச ஊழியர்களுக்கு செப்ரெம்பர் மாதச் சம்பளம் காசோலையாக வழங்கப்படுகிறது.

காசோலையை மாற்றிக் கொள்ள அரச ஊழியர்கள் கடை வர்த்தக நிலையங்களுக்கு அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

சில கடைகளில் காசோலை மாற்ற ஆயிரம் ரூபாவுக்கு 50ரூபா தரகுக் கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிய வருகிறது. (ஐ-117)

அடுத்த ஆண்டில்

## வெளிநாட்டு உதவிகளை அமெரிக்கா குறைக்கும்

வாஷிங்டன், செப். 25

அடுத்த ஆண்டில், வெளிநாடுகளுக்கான உதவியைக் குறைப்பது என்று அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான பிரேரணை அமெரிக்க செனற்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிக் குறைப்பு உலக நாடுகள் மத்தியில் அமெரிக்காவின் பொருளாதார ரீதியிலான செல்வாக்கை குறைக்கும் என ஜனநாயக வாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி அடுத்த ஆண்டில் உலக நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவியாக ஆயிரத்து 840 கோடி மட்டுமே இருக்கும் என அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## ராணுவ முகாமில் சமையல்காரர் மோதல்

குருநாகல் செப். 25

குருநாகல் மகிபிட்டிய போயகஹ இராணுவ முகாமில் பணியாற்றும் சமையற்காரர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருசமையற்காரரின் கைவிரல்கள் வெட்டப்பட்டன.

எதிரியான மற்றைய சமையற்காரர் இது தொடர்பாக ஆயிரத்து 500 ரூபா பிணையில் குருநாகல் நீதிவானால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக குருநாகல் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [ஒ-10]

## ஷெல் வீச்சில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், செப். 25

ஊரெழுப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை மரணமானார்.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி ராணி சிவராசா [40 வயது] என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா பற்குணராசா

சரவணை மேற்கு கந்தசாமி கோவிலடியை பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பற்குணராசா 21-09-95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பையா யோகேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு நாகம்மாவின் அன்பு மருமகனும், மகேஸ்வரன் (கனடா), தனபாலசிங்கம் (U. K), பத்மாவதி, இந்திரா, ரமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாராயணசாமி [இ. மின்சார சபை], அகிலன், சுமதி (கிராமசேவகர்), தனபாலசிங்கம், பரஞ்சோதியம்மா, மங்கையர்க்கரசி, சிவபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற நடேசமூர்த்தி, வடிவாம்பிகை ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-9-95) திங்கள் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. பரமேஸ்வரி (கிளி) (மனைவி),
சி. தனபாலசிங்கம் (மைத்துனர்)
151, பிரம்படி லேன்,
கொக்குவில். (38671)

## கந்தையா சிவசுப்பிரமணியம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய கன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஓவசியர் கந்தையா சிவசுப்பிரமணியம் நேற்று [24-9-95] காலமாகிவிட்டார்.

இவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், அனுசியா, சந்திரவதனி, சந்திரகலா, சிறிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதனின் மாமனாரும், சிவபாதசுந்தரம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மமலர், செல்லத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-9-95) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வன்னியசிங்கம் ஒழுங்கை, தாவடி வடக்கு, கொக்குவிலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவபாதசுந்தரம் (சகோதரன்)
வன்னியசிங்கம் ஒழுங்கை,
தாவடி வடக்கு, கொக்குவில். [38676]

## திருமதி இராஜலக்சுமி நாகேந்திரம்

நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜலக்சுமி நாகேந்திரம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகேந்திரம் [புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சரவணமுத்து — பொன்னம்மா தம்பதிகளின் மகளும், மயில்வாகனம், பேரானந்தன் [பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், சந்தானலக்சுமி, தனலக்சுமி, சிறிகாந்தன் (சுவிஸ்லாந்து), லக்சுமிகுமாரி ஆகியோரின் தாயாரும், கைலாசதுரை, காலஞ்சென்ற சிவலோகநாதன், மற்றும் சாசினி, பாலராஜா (சவுதி) ஆகியோரின் மாமியும், நாகரட்ணம் (Head Guard, Railway), ஆனந்தராசா [ஆசிரியர்], திருமதி இராசலக்சுமி ஆகியோரின் மைத்துனியும், கிருபாகரன், அமுதகரன், சிறிகரன், ரமணகரன், பிரியங்கா, நிருத்திகா, ஜெனதி, மாதங்கி, நிரோஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று திங்கள் (25-09-95) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ச. பேரானந்தன் (சகோதரன்)
535, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [38677]

## திருமதி ஞானரஞ்சனி செல்லத்துரை

திருமதி ஞானரஞ்சனி செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி) அவர்கள் 24-9-95 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (விரிவுரையாளர், ஆசிரியர் கல்லூரி பலாலி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தில்லையம்பலம் தையல்நாயகி அவர்களின் அன்பு புதல்வியும், பானுரேகா (மாணவி, இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் தாயாரும் —

கமலாசினி, மீனலோசனி, கௌரி, தயாபரி, ஜெகதீசன், கார்த்திகேயன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கதிரவேலு, காலஞ்சென்ற திருமதி இராமலிங்கம், மற்றும் வீரசிங்கம், திருமதி இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை [25-9-95] பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி. க. இராசையா
28, ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [38680]

### இனப்படு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் குண்டுவீச்சு நடத்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

இவற்றைக் கண்டித்தும், இனிமேல் இத்தகைய தாக்குதல்களை நிறுத்தக்கோரியும் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதென —

நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற வெகுஜன அமைப்புகளின் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

சகல மட்டத்திலும் உள்ள மக்கள் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்து கொள்வர்.

நாகர்கோவிலில் நடத்தப்பட்ட குண்டு வீச்சுக் கொடுமையை முதன்மைப் படுத்திப் பேரணி நடைபெறும்

குண்டு வீச்சில் இறந்த மாணவர்களின் பெயர்கள் அடங்கிய சுலோக அட்டைகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்படும்.

ஆர்ப்பாட்டப் பேரணி வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும். பேரணியின் இறுதியில் இனப்படுகொலைகளை நிறுத்தக்கோரும் ஜனாதிபதிக்கான மகஜர் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும்.

[அ-5-111]

### தீர்வு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேரரைத் தவிர ஏனைய மகாநாயக்க தேரர்கள் இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். எனினும் மல்வத்தை மகாநாயக்க தேரரும் கூட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து செய்தி அனுப்பியிருந்தார்.

எதிர்ப்புக் கூட்டத்துக்கு முன்னர் பிக்குகள் அரசின் தீர்வு யோசனைகளுக்கு எதிராக பேரணி ஒன்றை நடத்தினர்.

மஞ்சள் உடை தரித்த பிக்குகள் கறுப்புக் குடையுடன் பேரணியில் சென்ற சமயம் —

அப்பாதையில் சில குழுக்கள் கூடி நின்று அரசின் யோசனைகளுக்கு ஆதரவு தெரிவித்து கோஷம் எழுப்பினர்; பிக்குகளை அக்குழுவினர் கேலியும் செய்தனர்.

கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இக்கூட்டத்துக்கு பிக்குகள் வராதபோதிலும் —

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பிக்குகள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

[உ-3-5-6]

### இடம்பெயர்ந்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உதவுகின்றன.

உறவினர் வீடுகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு அவ்வப்பகுதி சனசமூக நிலையங்கள் உணவு வழங்கி வருகின்றன.

இதேவேளை—

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் மிகக் கூடுதலானோர் வரணி, எழுதுமட்டுவாழ் போன்ற தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். [அ-173-15]

### வடமராட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சந்தைகளுக்கும் ஒரு சில வியாபாரிகள் மட்டுமே வந்திருந்தனர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு வடமராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல்கள் புலோலி தெற்கு கார்த்தியூர் பகுதியில் வெற்றுக் [illegible] ஆயினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

[உ-173-15]

# வீடுகள் தோறும் பதுங்குகுழி அமைக்க அறிவுறுத்து

வடமராட்சி, செப். 25

ஸ்ரீலங்கா அரச படைகள் மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமுகமாக பதுங்குகுழிகளை உடனடியாக அமைத்துக் கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் வடமராட்சிப் பகுதி மக்களை அறிவுறுத்தி உள்ளனர்.

வீடுகள் தோறும் பதுங்கு குழிகள் அமைப்பதுடன் வீதிகளில் கூட்டமாக நிற்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிவுறுத்தல்கள் நேற்று முன்தினம் இரவு ஒலிபெருக்கி மூலம் வடமராட்சிப் பகுதி மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. [அ-173]

# குடாநாட்டில் படையினர் தொடர்ந்து ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், செப். 25

குடாநாட்டில் மக்கள் குடியிருப்புக்கள் மீதான படையினரின் ஷெல் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன.

நேற்றுக் காலை பலாலிப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. மக்கள் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்திருந்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

மாதகல், சில்லாலை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு ஏவிய ஷெல்கள் பனிப்புலம், செட்டிகுறிச்சி, சுழிபுரம் வடக்குப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

காரைநகர், சுழிபுரம் கடற்பரப்பில் இருந்து கடற்படையினர் கரையோரப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

(உ-3-15-28 185)

# அரசின் யோசனைகளை வரவேற்கிறாராம் அனுரா!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன்வைத்திருக்கும் ஆலோசனைகளை தாம் வரவேற்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

"லங்காதீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு நான் எதிரானவன் அல்லன். உண்மையில் இது ஒரு நல்ல யோசனையாகும்.

பிராந்திய சபைகளுக்கு பொலீஸ் அதிகாரம் வழங்குவது, வெளிநாட்டு உதவியை நேரடியாகப் பெற்றுக் கொள்ள அனுமதிப்பது மற்றும் அச்சபைகளின் முதலமைச்சர்களை பதவி விலக்குவதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லாதிருப்பது போன்ற ஏற்பாடுகளை நாம் எதிர்க்கின்றோம்.

எதிர் காலத்தில் ஐ. தே. கவின் நிலையும் இதுவாகவே இருக்கும்.

அரசு வெளியிட்டுள்ள யோசனைகள் தொடர்பாக மௌனம் சாதிப்பது என்ற ஐ. தே. கவின் நிலையை நான் பூரணமாக அங்கீகரிக்கின்றேன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக புலிகளுடன் பேச்சு நடத்துவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அரசு இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஒரு தீர்க்கமான கொள்கையுடன் நடக்கவில்லை என்பதையே நான் எடுத்துக் கூறுகிறேன்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நிராகரித்து, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த முன்வருவார்களேயானால் யுத்தம் தொடர்ந்து நடத்தப்படத்தான் வேண்டும் —இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா மேலும் கூறினார்.

### திலீபன்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காணப்பட்டது.

தியாகி திலீபனின் தற்கொடை உணர்வை பறைசாற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

வன்னிப் பெருநிலப் பகுதியிலும் திலீபன் நினைவு நிகழ்வுகள் வெகு எழுச்சிகரமாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. [உ-3]

### ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பேராலை, புதுக்காட்டுச் சந்திப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-117)

# ஹெந்தலவில் மா வரும்

யாழ்ப்பாணம், செப். 25

கொழும்புக்கு மா ஏற்றிச் சென்றுள்ள 'ஹெந்தல' கப்பல் இவ்வாரம் திருகோணமலைக்கு திரும்பி 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு வார இறுதிக்குள் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)


ROTARACT CLUB

இலவசமாக பொதுக் கிணறுகள் இறைத்தல்

யாழ். மிட் - ரவுண் றோற்றறக்ற் கழகம்

எமது கழகம் தொற்றுநோய்களைத் தடுக்கும் நோக்குடன் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பொதுக் கிணறுகளை இலவசமாக இறைத்துக் கொடுக்க தீர்மானித்துள்ளது. மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய இடம்:-

83, கோவில் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.
[கைலாசபிள்ளையார் கோவில் அருகில்]

— சமூகசேவை இயக்குநர்

[சி/2345]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-09-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org